## நடப்பு நிகழ்வுகள்: மார்ச் 10, 2017

**1. 2016 சரஸ்வதி சம்மன் விருதை விருதை அள்ளிச் சென்றவர் யார் ?**

A. நையேர் மஸ்வூத்
B. சுகதா குமாரி
C. சுர்ஜித் பாடார்
D. மஹாபலேஷ்வர் செயில்

**விடை: D. மஹாபலேஷ்வர் செயில்**

குறிப்பிடத்தக்க கொங்கனி எழுத்தாளர் மஹாபலேஷ்வர் செயில், அவரது 'Hawthan' நாவலுக்காக 2017 சரஸ்வதி சம்மான் விருதை பெற்றார். கோவாவை அடிப்படையாக கொண்ட செயில், நான்கு மராத்தி நாடகங்கள் மற்றும் ஏழு கொங்கனி நாவல்ககளை தனது கணக்கில் கொண்டுள்ள புகழ்பெற்ற இரு மொழி எழுத்தாளர். விருதில் ரூ .15 லட்சம் ரொக்கப் பரிசு மற்றும் ஒரு சான்று அடங்கும்.

**2. ஐரோப்பிய கவுன்சிலின் (EC) புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி யார் ?**

A. ஆண்ட்ரெஜ் பிளேன்கோவிக்
B. கிறிஸ்டியன் கெர்ன்
C. டொனால்ட் டஸ்க்
D. சார்லஸ் மிஷேல்

**விடை: C. டொனால்ட் டஸ்க்**

போலந்தை சேர்ந்த டொனால்ட் டஸ்க், ஐரோப்பிய கவுன்சிலின் தலைவராக இரண்டாவது முறையாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரின் மறுநியமனம் நவம்பர் 30, 2019 வரை மட்டுமே. ஐரோப்பிய கவுன்சில்(EU) என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒட்டுமொத்த அரசியல் இயக்கம் மற்றும் முன்னுரிமைகள் வரையறுக்கும் உரிமையை கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) ஒரு நிறுவனம் ஆகும்.

**3. பேறுகால நல (திருத்தச்) மசோதா- 2016 படி, மகப்பேறு விடுப்பானது 12 வாரங்களில் இருந்து எத்தனை வாரங்களாக நீட்டிக்கப்பட்டுள்ளது ?**

A. 22 வாரங்கள்
B. 26 வாரங்கள்
C. 23 வாரங்கள்
D. 24 வாரங்கள்

**விடை: B. 26 வாரங்கள்**

பேறுகால நல (திருத்தச்) மசோதா- 2016, சமீபத்தில் லோக்சபாவில் நிறைவேற்றப்பட்டது, இது பொது மற்றும் தனியார் துறையில் வேலை செய்யும் பெண்களுக்கு முதல் 2 குழந்தைகளுக்கு மகப்பேறு விடுப்பை 12 வாரங்களில் இருந்து 26 வாரங்களாக நீட்டித்துள்ளது. 2 குழந்தைகளுக்கு பிறகு, மகப்பேறு விடுப்பு 12 வாரங்களாகவே தொடரும். சட்டமாக மாற்றுவதற்கு முன், இந்த மசோதா தற்போது ஜனாதிபதியின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்படும். இது, ஏற்கனவே கடந்த குளிர்கால கூட்டத் தொடரின் போது மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டு விட்டது. மூன்று மாத வயதிற்கும் கீழே உள்ள குழந்தையை சட்டபூர்வமாக தத்தெடுக்கும் பெண்ணிற்கும் மற்றும் surrogate child-யை பெறுவதற்கு தனது முட்டையை பயன்படுத்தும் commissioning தாய்க்கும் (ஒரு உயிரியல் தாய் என வரையறுக்கப்பட்டுள்ளது) 12 வார மகப்பேறு விடுப்பை இந்த மசோதா வழங்குகிறது. இது போன்ற சந்தர்ப்பங்களில், தத்தெடுப்பவர்களிடம் அல்லது commissioning தாயிடம் ஒப்படைக்கப்படும் தேதியில் இருந்து 12 வார மகப்பேறு விடுப்பு கணக்கிடப்படும். இந்த மசோதா, 30 பெண்கள் அல்லது 50 ஊழியர்களை (இவற்றில் எது குறைவே அது எடுத்துக்கொள்ளப்படும்) கொண்டுள்ள நிறுவனங்களின் முதலாளிகள், அலுவலகத்தில் அல்லது 500 மீட்டர் சுற்றளவில் சிறார் பராமரிப்பு வசதிகளை வழங்க கட்டாயமாக்கி இருக்கிறது.

**4. எந்த நிறுவனம், IP/MPLS நெட்வொர்க் மீது Line-Differential Relay (LDR)-வை பயன்படுத்தி டெலி-பாதுகாப்பு சேவையை வெற்றிகரமாக நிறுவியுள்ள முதல் இந்திய ஆற்றல் நிறுவனமாக மாறியுள்ளது ?**

A. டாடா பவர்-DDL

B. அதானி பவர்
C. ஜிண்டால் ஸ்டீல் மற்றும் பவர்
D. ரிலையன்ஸ் பவர்

**விடை: A. டாடா பவர்-DDL**

நோக்கியாவுடனான ஒப்பந்தத்தின் காரணமாக, IP/MPLS நெட்வொர்க் மீது Line-Differential Relay (LDR)-வை பயன்படுத்தி டெலி-பாதுகாப்பு சேவையை வெற்றிகரமாக நிறுவியுள்ள முதல் இந்திய ஆற்றல் நிறுவனமாக Tata Power Delhi Distribution Limited (TATA Power-DDL) நிறுவனம் மாறியுள்ளது. நோக்கியா IP/MPLS தொழில்நுட்பம் மின் விநியோகத்தின் நம்பகத்தன்மை, அளவிடுதல், பாதுகாப்பு மற்றும் திறனை மேம்படுத்தியுள்ளது. டாடா பவர்-DDL, அதன் உள்கட்டமைப்பில் ஏதாவது தவறு நேர்ந்தால் கிட்டத்தட்ட உடனடியாக செய்தியை பெறவும் மற்றும் இறுதி நுகர்வோரின் இடையூறை குறைக்க மாற்று வழிகள் மூலம் சக்தியை இயக்குவும் நோக்கியாவின் மேம்பட்ட அமைப்பு அனுமதிக்கும். இந்த அமைப்பு அனைத்து கிரிட் பிரதேசங்களை இணைத்து டெலி பாதுகாப்பு உள்ளதை உறுதி செய்யும், இதனால் ஏதேனும் தவறுகள் இருந்தால் அதனை உடனடியாக சரிசெய்ய முடியும். பிணைய தரம் உயர்த்துவதை தவிர்த்து, வாடிக்கையாளர் தொடர்பு மேலாண்மை (CRM), நிறுவன வள திட்டமிடல் (ERP), வீடியோ கண்காணிப்பு அமைப்புகள் போன்ற மிகவும் பாரம்பரிய வணிக பயன்பாடுகளையும் நோக்கியா அமைப்பு வழங்குகிறது.

**5. எந்த இந்திய தொழில்நுட்ப கழகம்(IIT), 2017 IEEE ஸ்பெக்ட்ரம் தொழில்நுட்ப சமூக சேவை விருதை வென்றுள்ளது ?**

A. ஐஐடி பாம்பே
B. ஐஐடி சென்னை
C. ஐஐடி இந்தூர்
D. ஐஐடி கொல்கத்தா

**விடை: B. ஐஐடி சென்னை**

ஐஐடி சென்னை, அதன் சூரிய- நேரடி மின்சார இன்வெர்ட்டர் அமைப்புக்காக(solar-Direct Current (DC) inverter system) 2017 IEEE ஸ்பெக்ட்ரம்

தொழில்நுட்ப சமூக சேவை விருதை வென்றுள்ளது. மைக்ரோ கட்ட தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, வீட்டிலிருக்கும் மின் விநியோகமான 230V அனலாக் மின்சாரத்தை 48V DC ஆக மாற்றுகிறது,இதன் மூலம் மின்சார உபகரணங்கள் மற்றும் சாதனங்களுக்கு நேரடியாக மின்சாரம் அளிக்க முடியும். வீடு மற்றும் அலுவலகத்திற்கு மிகவும் சிறந்த ஆற்றல் தீர்வை அளிக்கக்கூடிய கூரை சூரிய ஆற்றலையும் நேரடி மின்சாரமாக மாற்றும் திறனையும் இவ்வமைப்பு கொண்டுள்ளது. மனிதகுலம் பயனடையும் சாத்தியம் கொண்டு உருவாக்கப்பட்ட தொழில்நுட்பம் என IEEE ஸ்பெக்ட்ரம் ஆசிரியர்களால் வாக்களிக்கப்படும் நிறுவனம் / கல்விக்கூடத்திற்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

**6. எந்த மாநில அரசு, அரசின் சாதனைகளை முன்னிலைப்படுத்த "Pratibimba" எனும் இணைய அடிப்படையிலான தளம் ஒன்றை முன்னெடுத்துள்ளது ?**

A. கேரளா
B. தமிழ்நாடு
C. மகாராஷ்டிரா
D. கர்நாடகா

**விடை: D. கர்நாடகா**

சமீபத்தில் கர்நாடக முதல்வர் சித்தராமையா, அரசாங்கத்தின் செயல்திறன் மற்றும் குடிமக்களின் சாதனைகளை வெளிப்படுத்த "Pratibimba" எனும் விரிவான இணைய அடிப்படையிலான தளம் ஒன்றை முன்னெடுத்துள்ளார். முதலமைச்சரின் செயல் பலகை போன்று உருவாக்கப்பட்ட இந்த தளம், ஆளுகையில் செயல்திறனை மேம்படுத்த மற்றும் குடிமக்கள் அரசாங்கத்தின் முன்னேற்றத்தை கண்காணிக்க அனுமதிக்கும் ஒரு கருவியாக பயன்படும். இது, மாநிலத்தின் வளர்ச்சி கதை மற்றும் மேம்பாட்டின் பிரதிபலிப்பாகும். மாநிலத்தின் அனைத்து துறைகளிலும் மேற்கொள்ளப்படும் தலைமை திட்டங்கள், முக்கிய திட்டங்களின் பணிகளை இந்த செயல் பலகை(Dash Board) பிரதிபலிக்கும். செயல் பலகை ஆங்கிலம், கன்னடம் ஆகிய இரு மொழிகளில் கிடைக்கிறது.

**7. எந்த பிரபல கிரிக்கெட் வீரர், UNICEF மற்றும் ஐசிசி மகளிர் உலக கோப்பை 2017 கிரிக்கெட்டுக்கான நல்ல தூதராக நியமிக்கப்பட்டுள்ளார் ?**

A. சச்சின் டெண்டுல்கர்
B. சவுரவ் கங்குலி
C. ராகுல் டிராவிட்
D. எம் எஸ் தோனி

**விடை: A. சச்சின் டெண்டுல்கர்**

இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர் அதிகாரப்பூர்வமாக, UNICEF மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் மகளிர் உலகக் கோப்பை 2017 கிரிக்கெட்டின் நல்ல தூதராக சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) மூலம் நியமிக்கப்பட்டுள்ளார். யுனிசெப் மற்றும் ஐசிசி ஆகிய இரண்டும், அடுத்த 5 ஆண்டுகளில் ஐசிசி நிகழ்வுகளின் போது குறிப்பாக வளரிளம் பெண்களுக்கு அங்கீகாரம் அளிக்க, பயிற்சியாளர்கள், கிரிக்கெட் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் பிரமுகர்களுடன் இணைந்து பல்வேறு சமூக நலனுக்காக திட்டங்கள் மற்றும் முயற்சிகளை செயல்படுத்த.மற்றும் மேம்படுத்த , கிரிக்கெட் சமூகத்தை பரந்த அளவில் கொண்டு செல்லும் வேலையை ஏற்கிறது.

**8. "Age of Anger - A History of the Present" என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார் ?**

A. கல்யாண் கர்மாகர்
B. பங்கஜ் மிஸ்ரா
C. பீம் சந்திரா நாக்
D. மொராஜ் பட்

**விடை: B. பங்கஜ் மிஸ்ரா**

குறிப்பிடத்தக்க இந்திய எழுத்தாளர் பங்கஜ் மிஸ்ரா, "Age of Anger - A History of the Present" என்ற புத்தகத்தினை எழுதியுள்ளார். இவரின் இந்த புதிய புத்தகம், பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியின் மீது பார்வையை போடுவதன் மூலம் இன்றைய உலக சிக்கல்களான வலதுசாரி கட்சிகள் எழுச்சி, ISIS

நீலிஸ்டிக் வன்முறை மற்றும் பெருகிவரும் மக்கள் ஏமாற்றம் ஆகியவற்றின் தொடக்கப்புள்ளியை ஆராய்கிறது.

**9. சமீபத்தில், புகழ்பெற்ற IANS பத்திரிகையாளர் அரவிந்த் பத்மநாபன் மறைந்தார். இதில் IANS என்பது எதைக் குறிக்கிறது ?**

A. Indo-ASEAN News Service
B. Indo-Asiatic News Service
C. Indo-Asian News Service
D. Indo-African News Service

**விடை: C. Indo-Asian News Service**

Indo-Asian News Service (IANS)-ன் மூத்த செய்தியாளர் மற்றும் நிர்வாக ஆசிரியர் அரவிந்த் பத்மநாபன்(49) சமீபத்தில் புது தில்லியில் காலமானார். இவர் IANS-ல் இணைவதற்கு முன், இந்திய பிரஸ் நிறுவனம் (PTI), டைம்ஸ் ஆ்ஃப் இந்தியா, TV18 ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார். IANS ஒரு தனியார் இந்திய செய்தி நிறுவனம் மற்றும் இந்திய-அமெரிக்க வெளியீட்டாளர் கோபால் ராஜூ மூலம் இது நிறுவப்பட்டது.

**10. மத்திய நீர் ஆணையத்தின் (Central Water Commission) புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் யார் ?**

A. மசூத் ஹுசைன்
B. நரேந்திர குமார்
C. டி கே சிவராஜன்
D. ஏ எஸ் பி சின்ஹா

**விடை: B. நரேந்திர குமார்**

மத்திய நீர் பொறியியல் சேவை (1979 தொகுதி) அதிகாரியான நரேந்திர குமார், சமீபத்தில் மத்திய நீர் ஆணையத்தின்(CWC) தலைவராக பொறுப்பேற்றார். இந்தியாவில் நீர்வள துறையில் CWC ஒரு உச்ச அமைப்பாகும், இது 1945 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. வெள்ள மேலாண்மை, பாசனம், குடிநீர் விநியோகம் மற்றும் நீர் மின்சக்தி உற்பத்தி

தேவைக்காக அந்தந்த மாநிலத்தில் நீர் வளங்களை கட்டுபடுத்தும், பாதுகாக்கும் மற்றும் பயன்படுத்தும் திட்டங்கள் குறித்து மாநில அரசாங்கத்தின் ஆலோசனையுடன் ஆரம்பித்து, ஒருங்கிணைக்கும் பொது பொறுப்பு CWC-க்கு வழங்கப்பட்டுள்ளது.